விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு


சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 29 வெள்ளிக்கிழமை (15.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 351



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
ஆசியாக் கண்டத்தில் [illegible]தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து


## விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர்

# அன்ரன் பாலசிங்கம் காலமானார்



(லண்டன்)

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று லண்டனில் காலமானார்.

அறுபத்தெட்டு வயதான அன்ரன் பாலசிங்கம் கடந்த 35 வருடங்களாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த 10 மாதங்களாக கடும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவரின் உயிர் பிரித்தானிய நேரப்படிநேற்று பிற்பகல் 1.45 மணியளவில் மண்ணை விட்டுப் பிரிந்ததாக அவரது குடும்பத்தினர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# "தேசத்தின் குரல்" பாலா அண்ணைக்கு தலைவர் பிரபாகரன் கௌரவம்

(கிளிநொச்சி)

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் மாபெரும் போராட்டப் பணிக்கு மதிப்பளித்து தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனால் 'தேசத்தின் குரல்' என்ற மாபெரும் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

அன்ரன் பாலசிங்கத்தின் மறைவு குறித்த தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் வெளிவிடப்பட்ட இரங்கல் குறிப்பு வருமாறு,எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல் இராஜதந்திர நகர்வுகளில் எமக்கு பக்க பலமாக இருந்து செயற்பட்ட எமது தேசத்தின் ஒளி விளக்கு (இன்று) அணைந்து விட்டது.

ஆலோசனை வேண்டி, ஆறுதல் தேடி ஓடுவதற்கு பாலா அண்ணை இன்று என்னுடன் இல்லை. இவரது மறைவு எனக்கு மாத்திரம் அல்ல; தமிழீழ தேசத்திற்கே இட்டு நிரப்ப முடியாத பேரிழப்பு. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே விரியும் காலமாக மனித வாழ்வு நிலைக்கிறது.

இந்த வாழ்வுக்காலம் எல்லா மனிதர்களுக்கும் ஒரே மாதிரியாக,ஒத்ததாக ஒரு சீராக அமைவதில்லை. காலச்சீரற்றதாக ஒருவருக்குக் கூடி,மற்றவருக்கு குறுகி இன்னொருவருக்கு அதிகம் நெடுத்துக் கூடிக் குறைந்து செல்கிறது.


துரதிர்ஷ்டவசமாக பாலா அண்ணையினது வாழ்வு இடை நடுவில் நின்று போய் விட்டது. தீவிரம் பெற்றுள்ள எமது விடுதலைப் போராட்டத்திற்கு அவர் நிறையப்பணிகளை ஆற்ற வேண்டி இருக்கின்ற தருணத்தில் அவருக்கு மரணம் சம்பவித்திருக்கிறது.

இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத்துகிறது. என்னுள்ளத்தை உடைத்து, நெஞ்சத்தைப் பிளக்கிறது.

கட்டுக்கடங்காத காட்டாறுபோல சீறிப்பாயும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தை என்னால் வார்த்தைகளால் கொட்ட முடியாது. மனித மொழியில் இதற்கு இடம் இல்லை. பழக ஆரம்பித்த நாள் முதலே எமக்கிடையே ஒரு இனம் புரியாத புரிந்துணர்வு ஏற்பட்டது.

அந்த புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைத்துக் கொண்டு எமது உறவு நல்லுறவாக வளர்ந்து நட்புறவாக பரிணமித்தது. சிந்தனையாலும் செயலாலும் ஒன்று பட்ட மனிதர்களின்

(04 ஆம் பக்கம் பார்க்க)



## கடற்றொழிலாளர் பரு.வில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வெளிச்சவீட்டுப் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுக் நண்பகல் 12.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது தும்பளை வீதியிலுள்ள கடற்றொழிலாளரான தர்மதாஸ் மோகனதாஸ் (வயது 21) என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பதில் நீதிவான் என்.தங்கராசா பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையை வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார். (ச-52,10)

## சர்வகட்சி பிரதிநிதிகள் குழு அடுத்தவாரம் கூடுகிறது

(கொழும்பு)

சர்வ கட்சி பிரதிநிதிகளின் குழு மீண்டும் அடுத்த வாரம் கூடவுள்ளது. தற்போது கிடைத்துள்ள ஆரம்ப கட்ட யோசனைகள் குறித்து இதில் ஆராயப்படவுள்ளதாக குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

புத்திஜீவிகள் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு ஆலோசனைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது. குறிப்பிட்ட யோசனைகள் தொடர்பாக கட்சிகளுக்குள்ள தனிப்பட்ட கருத்துக்கள் மற்றும் மாற்று யோசனைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கலின் போது ஏற்படும் பிரச்சினைகள் குறித்து அடிப்படை விளக்கம் ஒன்றை பெற்றுக்கொள்ளவும் இந்த பிரதிநிதிகள் குழுக்கூட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சிகளுக்கு மத்தியில் பொது நிலைப்பாடு ஒன்றையும் ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இம் முறை நடைபெறவுள்ள சர்வகட்சி பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியும் கலந்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ச-9)

## ரவிராஜ் எம்.பியின் குடும்பத்திற்கு ஐந்து மில்லியன் ரூபா இழப்பீடு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட இலங்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் குடும்பத்தினருக்கு இழப்பீடாக 5மில்லியன் ரூபாவை திறைசேரியிலிருந்து வழங்குவதற்கான அனுமதிகோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைச்சரவைக்கு முன் வைக்கப்பட்ட பிரேரணைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இதில் கலந்து (04 ஆம் பக்கம் பார்க்க)

# கூடிய விலையில் உரம் விற்கும் விவசாயிகள் மீது நடவடிக்கை

## உதவி ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மானிய உரத்தை கூடிய விலையில் விற்கும் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். அது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

பெரும்போக நெற்செய்கைக்காக கொண்டு வரப்பட்ட மானிய உரம் தற்போது 13 கமநல சேவை நிலையங்களூடாக ஒரு கிலோ 7 ரூபா வீதமும் அதற்குரிய போக்குவரத்துச் செலவாக 2 ரூபா 50 சதமும் அறவிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு மானிய உரத்தைப் பெற்றுக் கொண்ட சில விவசாயிகள் கூடிய விலையில் வெளியில் விற்பனை செய்வது எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறு மானிய உரம் கூடிய விலைக்கு விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகுமென்பதை விவசாயிகளின் கவனத்துக்கு கொண்டு வருவதுடன்,

இவ்வாறு விற்பனை செய்யும் விவசாயிகள் இனங்காணப்படின் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிவுறுத்தல் வழங்குவதோடு,

இனிவரும் காலங்களில் அவர்களுக்கு எதுவித விவசாய உதவிகளும் வழங்கப்பட மாட்டாது என்பதனையும் சகல விவசாயிகளுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றுள்ளது. (ச)

# ஆசிரியர் டிப்ளோமா முடித்தவர்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன!

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் டிப்ளோமாப் பயிற்சியை முடித்து அடுத்த வருடம் ஆசிரியர் நியமனம் பெறவிருக்கும் தமிழர்களின் விபரங்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் திரட்டி வருகின்றது.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சியை நிறைவு செய்து அடுத்த வருடம் ஆசிரியர் நியமனம்பெற விரும்புபவர்களுக்கு பொருத்தமான மாவட்டங்களில் நியமனம் மற்றும் வசதிகளை ஏற்புடைய முறையில் பெற்றுக் கொடுப்பதற்கு வசதியாக சம்பந்தப்பட்டவர்களின் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாக செயலாளர் எஸ்.சரவணபவானந்தன் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்கள் தமது சுய விபரம், ஆசிரியர் நியமனம் பெற விரும்பும் மாவட்டம், கல்வி வலயம், பயிற்சி பெற்ற தேசிய கல்வியியற் கல்லூரி, சற் புள்ளியின் விபரம், கஷ்டப் பிரதேச, அதி கஷ்டப் பிரதேச பாடசாலையில் கடமையாற்ற விரும்பி னால் அதன் விபரம், பயிற்சி முடித்து இறுதிப் பரீட்சையில் பெற்ற சித்தியின் தன்மை என்பவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை எதிர்வரும் 31 ஆம் திகதி முன்னர் நிர்வாக செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், கனடா இல்லம், கொழும்பு 15 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ச)

# அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் தீவகத்தில் இலவச மருத்துவ முகாம்

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட மருந்துகளைக் கொண்டு தீவக அரிமாக் கழகத்தினர் புங்குடுதீவு, புளியங்கூடல், வேலணை வாழ் மக்களின் தேவை கருதி மேற்படி மருத்துவ முகாம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்திலும் அன்றைய தினம் பி.ப.ஒரு மணி முதல் பி.ப. 3.30 மணிவரை யாழ்வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்திலும் நடாத்தப்படவுள்ளது.

வைத்தியகலாநிதி லயன் ஜே.ராஜரட்ணம் தலைமையிலான வைத்தியர் குழாம் இம் முகாமில் கலந்து கொள்வார்கள்.

இம் முகாமில் சிக்கின்குனியா பரிசோதனை, ஆலோசனை, மருந்து வழங்கலும் சிறுவர் ஊட்டச்சத்து மருந்துவழங்கலும் ஆலோசனையும் நீரிழிவுப் பரிசோதனையும் மருந்து வழங்கலும் மற்றும் சுகாதார வைத்திய ஆலோசனையும் இலவசமாக வழங்கப்படும்.

இவ் இலவச மருத்துவ முகாமில் புங்குடுதீவு, புளியங்கூடல், வேலணை வாழ் மக்கள் கலந்து பயன்பெறுமாறு தீவக அரிமாக் கழகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (ச)

# கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

## சமூக சேவைகள் அமைச்சு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் இன்றைய நிலையில் முகம் கொடுத்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளைக் காண சமூக சேவைகள் மற்றும் நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் தற்போதைய சூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவர்களது பிரச்சினைகள் குறித்து பலர் தனித்தனியாகவும் அமைப்புக்களின் ஊடாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில் முதற்கட்ட நடவடிக்கையாக அவர்களது பிரச்சினைகள்தொடர்பில்ஆராயும் பொருட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கைகளை முன்வைத்துள்ள கடற்றொழிலாளர்களையும் இதுவரை கோரிக்கைகளை முன்வைக்காதிருக்கும் பிரச்சினைகளுக்குட்பட்டுள்ள ஏனைய கடற்றொழிலாளர்களையும் தனது யாழ்.அமைச்சு அலுவலகத்தில் வைத்துச் சந்திக்கவுள்ளதாக அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சுவரொட்டிப் போட்டியில் யாழ்.மாணவர்கள் சாதனை

(யாழ்ப்பாணம்)

தொழில் உறவுகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சுவரொட்டிப் போட்டியில் பல்கலைக் கழக, பாடசாலை மட்டங்களில் யாழ்.மாணவர்கள் மூவர் பரிசில்கள் பெற்றுள்ளனர்.

இலங்கை அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமிடையேயான சுவரொட்டிப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலையைத் துறையைச் சேர்ந்த ர.பிரகாஷ் நாடளாவிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அனைத்துப் பாடசாலை மட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஜெயசாளினி கோகிலன் அதிவிசேட இடத்தையும் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாட சாலையைச் சேர்ந்த மாணவி சுபாசினி சுகுமார் விசேட இடத்தையும் பெற்றுள்ளார்கள். (ச)

# வணிகர் கழகத்தின் அறிவிப்பு

எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு நாளை 16 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் கடைகள் திறந்து வியாபாரம் செய்யலாம் என யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண் டுமெனவும் 31 ஆம் திகதிக்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில்வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (ச)

# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

சத்தியரூபன் பெண் தயாநிதி
குறுக்கு றோட்,
நீர்வேலி வடக்கு.
-வழக்காளி

வழ.இல.மண நீக்கம்/725

எதிராக

சத்தியோஜாத சர்மா சத்தியரூபன்
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
தற்போது தெரியாது.
-எதிராளி

இவ்வழக்கு 2006 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை வலம்புரிப் பத்திரிகையில் பதில் சேவகம் செய்யப்பட்டு திரும்பல் திகதி யாகிய இன்று எதிராளி மன்றில் சமூகமின்மையால் இவ்வழக்கு இன்று ஒரு முக விளக்கத்திற்காக நியமிக்கப்பட்டு வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த அனுமதி கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தையும் வழக்காளியின் தகப்பனாரின் சாட்சியத்தையும் நெறிப்படுத் தப்பட்ட பின்னர் அளிக் கப்பட்ட சாட்சியங்களில் இருந்து வழக்காளி சார்பில் வன்ம உறவறுப்பு என்ற குற்றம் தொடர்பில் திருப்திகரமான சாட்சியம் முன் வைக்கப்பட்டுள்ளதாக மன்று கருதி இக் குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கொண்டு பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 31.08.1996 இல் நடைபெற்ற பதிவுத் திருமணம் இத்தால் இரத்துச் செய்து கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளி தனது கன்னிப் பெயரை முற்றான் தீர்வை பதியப்பட்ட பின்னர் தொடர்ந்தும் உபயோகிக்கலாம் எனக் கட்டளையிடப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி அழைப்புக் கட்டளை பதில் சேவகம் செய்யப்பட்டதுபோல் தேசிய தினசரிப் பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் இப் பின்னுறுதித் தீர்வை யானது முற்றான தீர்வையாக்கப்படும் என கட்டளையிடப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி

வரைந்தது
*திருமதி லிங்கா துரைராஜா*
வழக்காளியின் சட்டத்தரணி

*திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்*
மேலதிக மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்.

நீதிமன்றக் கட்டளைப்படி
*து.சிறீமோகன்*
பதிவாளர்.

(678)

# இளைஞன் வெட்டிக் கொலை

அனலைதீவில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்று முன்தினமிரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வெட்டிக் கொலை செய்யப்பட்டவர் சுப்பையா சசிகரன் (வயது-25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனின் சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-1)

# வெடிபொருள்களுடன் சென்ற வாகனம் பொலிஸாரிடம் சிக்கியது

(கொழும்பு)

வெடிபொருள்களுடன் சென்ற வாகனம் ஒன்றை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாக பயணித்த சந்தேகத்துக்கிடமான சிற்றூர்தி ஒன்றினை சோதனையிட்ட போது அதில் தனியாக சிறு பகுதி உருவாக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாகனத்தின் சாரதியும் உரிமையாளரும் கைது செய்யப்பட்டதாக தெரிவித்துள்ள பொலிஸார், நேற்று இவர்களை அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மற்றும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக இதே சோதனைச் சாவடியில் தற்கொலைத் தாக்குதலுக்கென உருவாக்கப்பட்ட மற்றுமொரு வாகனத்தை தாம் கைப்பற்றியதாக பொலிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

# பிரதேச செயலரின் வீட்டின் மீது தாக்குதல்

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேச சபை உப தலைவரின் இல்லத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக உப தலைவர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தின் போது உப தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினர் வீட்டிலேயே இருந்ததாகவும் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் வீட்டின் பின் பகுதிக்கு சிறிது சேதம் ஏற்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ச-9)

# 100 கோடி ரூபா இழப்பீட்டை இலங்கையிடம் கோர வேண்டும்

## உலகத் தமிழர் பேரவை கோரிக்கை

(சென்னை)

கச்சத் தீவில் மீன்பிடிக்க இயலாமல் நஷ்டத்துக்கு உள்ளான தமிழக மீனவர்களுக்கு 100 கோடி ரூபா இழப்பீடு தரும்படி இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டுமென்று உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா. சனார்த்தனம் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. கச்சத்தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமைதமிழக மீனவர்களுக்கு உள்ள நிலையில் கடந்த பல ஆண்டுகளாக மீன்பிடிக்க இலங்கை அரசு தடுத்து வருகின்றது.

அதை இலங்கையிடமிருந்து திரும்பப் பெற தமிழக அரசும் மத்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக் கடற்படை தமிழக மீனவர்கள் மீது தாக்குதலை நடத்தி வருகின்றது. மீன் பிடித்தொழிலையே நம்பி வாழும் அவர்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர் என அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-1)

# நடமாடும் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது க.பொ.த.(சா/த) பரீட்சையில் தோற்றி வரும் பாடசாலை மாணவர்கள் சிக்கின்குனியா நோயினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இம் மாணவர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சைகளை வழங்கும் நடவடிக்கைகளை சமூக சேவைகள் மற்றும் நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

நேற்றுமுதல் செயற்படும் வகையில் அம் மாணவர்களுக்குத் தகுந்த மருத்துவ சிகிச்சையை வழங்கும் மூகமாக நடமாடும் சேவை ஒன்றை அமைச்சர் ஆரம்பித்துள்ளார் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

> உண்மையைச் சொல்வதுதான் உலகிலேயே மிகப் பெரிய நகைச்சுவை.
>
> -பெர்னார்ட்ஷா

வலம்புரி

# வாகனத் தரிப்பிடமின்றி மக்கள் தவிப்பு கவனிப்பார் யாருமில்லை

யாழ்.நகர மையத்தில் வாகனத் தரிப்பிடங்கள் இன்மையால் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் வருவோர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எங்குதான் வாகனங்களை தரித்து வைப்பதெனத் தெரியாது மக்கள் படும்பாட்டிலிருந்து யாழ்ப்பாணத்து மக்களின் அடிப்படை வசதிகள் எப்படியிருக்கின்றன என்பதை உணர முடியும்.

யாழ்.நகர வீதிகளிலுள்ள ஒவ்வொரு வர்த்தக நிலையத்திலும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்கள் நிறுத்த வேண்டாம் என எழுதி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.வர்த்தகர்கள் விலைப்பட்டியலைப் பார்வைக்காக வைத்திருக்கின்றார்களோ இல்லையோ துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிளை இவ்விடத்தில் நிறுத்த வேண்டாம் என்பதை ஒழுங்காக எழுதி வைத்திருக்கின்றார்கள்.

சில வர்த்தக நிலையங்கள் தமது கடை வாசலில் பணியாளர் ஒருவரை நிறுத்தி யாரேனும் துவிச்சக்கர வண்டியை நிறுத்த முற்பட்டால் அதனைத் தடுக்கும் கடமையை அவரிடம் வழங்கியிருக்கின்றார்கள்.

வாகனத் தரிப்புமில்லை. வர்த்தக நிலையங்களுக்கு முன்னதாகவும் விட முடியாதென்றால் பொது மக்கள் என்ன செய்வது? பாதுகாப்புக் காரணங்களையொட்டி இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும் அதற்கான ஓர் மாற்று நடவடிக்கை தேவையல்லவா?

பொதுமக்கள் எப்பாடுபட்டாலும் பரவாயில்லை என்ற நினைப்பில் எழுந்தமானமாக எடுக்கப்படும் முடிபுகளால் மக்கள்படும் சொல்லொணாத்துன்பங்களை வெறும் மொழி நடையில் வெளிப்படுத்தி விட முடியாது.

இவற்றைச் சாதாரண மனிதர்களாகவிருந்து அனுபவிக்கின்ற போதே அதனை உள்ளார்ந்தமாக உணர்ந்து கொள்ள முடியும்.

யாழ்.நகரத்தில் வாகனத் தரிப்பிடமின்மையால் மக்கள் படும்பாட்டை நேரில் பார்க்க வேண்டுமாயின்யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நின்றால் தெரியும்.

தேசிய சேமிப்பு வங்கியின் வளாகத்துக்குள் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வைத்திய சாலைக்குச் செல்ல முற்படுவோர் அதனைத்தடுத்து நிறுத்துவதில் வங்கியின் பாதுகாப்பு ஊழியர்கள் படும் அவஸ்தை இவையெல்லாம் தேவையா? என்ற வெறுப்பு நிலைக்கு மக்கள் ஆளாகின்றனர்.

எனவே யாழ்.நகரப் பகுதிக்கு வருகின்றவர்கள் தமது துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களை தரித்து வைப்பதற்கான இடத்தை உடனடியாக ஏற்பாடு செய்வது அவசியமாகும்.

இது விடயத்தில் யாழ்.மாநகர சபை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

வாகனத் தரிப்பிடத்தை அமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தின் உதவியை நாடுவது ஒரு வழியாக இருக்கும்.

# பேச்சுவார்த்தை அர்த்தமற்றது யுத்தத்தில் அரசு வெற்றி பெறும்

## பாதுகாப்புதுறை அமைச்சின் ஆலோசகர் பேட்டி

(கொழும்பு)

பேச்சுவார்த்தை அர்த்தமற்றது. யுத்தத்தில் அரசு வெற்றி பெறும் என இலங்கை பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனியா தெரிவித்துள்ளார். நோர்வே, இந்தியா உட்பட அனைத்துலக நாடுகளின் கடும் போக்கையும் அவர் சாடியுள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் த மோர்னிங் லீடர் வார ஏட்டுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

*கேள்வி:-* மிக மோசமான அழிவை இந்நாடு சந்திக்க நேரிடுமென விடுதலைப்புலிகள் எச்சரித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் கடந்த கால தாக்குதல்களின் தீவிரத் தன்மையைக் கருத்தில் எடுத்தால் அவர்களது பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இந்நாடு தயாராகவிருக்கின்றதா?

*பதில்:-* நிச்சயமாக நாம் தயாராக இருக்கின்றோம். அதற்கு ஏன் தயாராகவிருக்கக் கூடாது? ஆனால் சு.ப.தமிழ்ச்செல்வனின் எச்சரிக்கை எல்லாம் வெறும் வார்த்தையில் மட்டுந்தான். விடுதலைப்புலிகள் ஒரு தோல்வியடைந்த அமைப்பு என்பது அனைவருக்கும் தெரியும். வடக்குக் கிழக்கில் போர் நடந்தாலும் நாடு சீராகவே இயங்குகின்றது. கொழும்பில் வாழும் மக்கள் தமது அன்றாடக் கடமைகளை வழமை போன்று செய்து வருகின்றார்கள். இந்நாட்டுக்கு வந்துபோக விரும்புபவர்களும் வழமைபோன்று வந்து செல்கிறார்கள்.

அரசாங்கம் தற்போது கவனத்தில் எடுக்க வேண்டியது அகதிகள் பல்வேறு சிரமங்களையும் சந்தித்து வரும் வடக்குக் கிழக்குப் பகுதிகளைத்தான். அவர்களுக்கு உதவிகளும் நிவாரணங்களும் வழங்கும் அரசின் முயற்சிகள் எல்லாம் விடுதலைப்புலிகளினால் தொடர்ந்து தடுக்கப்படுகின்றன.

விடுதலைப்புலிகள் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணியதில்லை. அதனால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். கொழும்பில் இடம்பெறும் அத்தனை கடத்தல்கள் மற்றும் கொலைகளுக்கும் விடுதலைப்புலிகளே காரணம்.

இங்கு எமது நாட்டில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழுவினர் கூட துரோகிகள்தான். ஒற்றையாட்சியைக் கொண்ட நாடு என்பதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவாக கூறியிருக்கையில் மகிந்தவுக்கு எதிரான முடிவை அவர்கள்எடுத்திருப்பது துரோகச் செயல்.

*கேள்வி:-* சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக நீங்கள் சொல்லும் குற்றச்சாட்டை எப்படி நியாயப்படுத்துவீர்கள்?

*பதில்:-* மகிந்த ராஜபக்ஷ பதிவியேற்ற நாள்முதல் விடுதலைப்புலிகளைப் பேச்சுக்கு வரும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றார். ஆனால் அவர்கள் அன்றுமுதல் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து வருகின்றார்கள்.

தனிநாட்டை அரசு அனுமதிக்க முடியாது. ஒரு பயங்கரவாதக் குழுவுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கவும் முடியாது. மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற நாள்முதல் சர்வதேச சக்திகள் விடுதலைப்புலிகளைப்பலப்படுத்தி வருகின்றன.

படையினர் மத்தியிலும் பல்வேறு துரோகிகள் இருக்கின்றார்கள். இவர்களும் விடுதலைப்புலிகளுக்கு உதவுகின்றார்கள். பல்லாயிரம் பேர் இந்தத் துரோகத்தால் உயிரிழக்கிறார்கள் என்பதை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. அப்பாவிப் பொதுமக்களும் படையினரும் தினமும் மடிகின்றார்கள்.

நோர்வே நாட்டவர்தான் மிக மோசமான துரோகிகள். அவர்களும் விடுதலைப்புலிகளும் ஒன்றுதான். விடுதலைப் புலிகள் போன்றுதான் அவர்களும் செயற்படுகின்றனர். வார்த்தையில் எல்லாம் சொல்வார்கள்.ஆனால் செயலில் எதுவும் இல்லை.

அகதிகளுக்கு இலங்கை அரசாங்கம் உதவி செய்வதற்கு நோர்வே நாட்டவர்கள் உதவியிருக்கின்றார்களா? விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று நோர்வே கோரியதா? குறிப்பிட்ட தங்களது இடத்துக்கு வர வேண்டாம் என விடுதலைப்புலிகள் கூறினால் இவர்கள் போகாது தவிர்க்கிறார்கள்.

நோர்வேக்காரரை இரு என்று விடுதலைப்புலிகள் சொன்னால் இருக்கின்றார்கள். விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளுக்கு தலை வணங்குபவர்களாக நோர்வேக்காரர்கள் இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களை நாம் எப்படி அனுசரணையாளர்கள் என்று அழைப்பது?

மக்கள் வெளிப்படையாக பேசும் காலம் வந்து விட்டது. இந்த நாட்டை நோர்வேக்காரர்கள் அடிப்பதற்கு முன்னர் அவர்களை வெளியேற்றும்படி மக்கள் கோரவேண்டும்.

*கேள்வி:-* இராணுவ ரீதியாக போரை வெற்றி பெற முடியுமா?

*பதில்:-* நிச்சயமாக முடியும். பல நூற்றாண்டுகளாக இந்த நாடு யுத்தங்களில் ஈடுபட்டு வந்துள்ளது. இந்த யுத்தத்தை மட்டும் ஏன் வெற்றிபெற முடியாது. இந்நாடு தமிழர்களுக்கு எதிராகப் போர் புரியவில்லை. தங்களைத் தமிழினத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு பயங்கரவாதக் குழுவுக்கு எதிராகவே போர் தொடுத்துள்ளது.

பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகள் என்ற குழுவினர் இந்நாட்டுக் கலை, கலாசாரம், மக்கள் ஏன் நாட்டையும் அழிக்க முற்படுகின்றார்கள்.

*கேள்வி:-* பேச்சுவார்த்தைகளில் ஏதுவும் நம்பிக்கை இருக்கின்றதா?

*பதில்:-* நிச்சயமாக எதுவும் இல்லை. ஜெனீவாப் பேச்சுக்களில் எதையடைந்தோம். அனைத்துலக சமூகத்தை திருப்திப்படுத்துவதற்காக மட்டுமே நாம் பேச்சுக்கு செல்கின்றோம். மற்றப்படி இராணுவ ரீதியாக எம்மால் புலிகளை அழிக்க முடியும்.

*கேள்வி:-* விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நீங்கள் குறிப்பிடும் அனைத்துலக சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுப்பது துர்ரதிர்ஷ்டமானதல்லவா?

*பதில்:-* நாம் அவர்களுக்குத் தலைவணங்க வேண்டும். அல்லது அவர்கள் இலங்கையை தோல்வியடைந்த நாடாக பட்டியலிட்டு விடுவார்கள். அவர்களுக்கு நாம் பிரமாணிக்கமாக நடக்கத் தவறினால் உதவிகளை நிறுத்துவார்கள். அகதிகளுக்கான நிவாரணங்களை நிறுத்துவார்கள்.

ஏற்கனவே பல தடவை எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். ஏன்? எங்கள் அண்டை நாடான இந்தியா கூட வடக்குக் கிழக்கு இணைப்பை உச்சநீதிமன்றச் சட்டப்படி செல்லாது என்று தீர்ப்பு வழங்கி பிரித்ததை தவறு என்று எமது நாட்டின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வேறொரு நாடு எப்படி குறை சொல்லலாம்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கு நாம் போகாவிட்டால் சர்வதேச நாடுகள் எங்களைக் குறை சொல்வார்கள். (ச)

# பரீட்சை மண்டபத்தில் மயக்கமடையும் க.பொ.த. சாதாரண தர மாணவர்கள்

## கல்விப் பணிப்பாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தீவிரமாகப் பரவியுள்ள சிக்கின்குனியா நோயினால் பாதிக்கப்பட்ட 150 மாணவர்கள் வலிகாமப் பகுதியிலிருந்து க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றவில்லை என வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். சில மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் மயக்கமடைந்த தாகவும் அவர் தெரிவித்தார்.

அந்நோயினால் பாதிக்கப்பட்ட க.பொ.த.(சா/த) பரீட்சையில் தோற்றுக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது.

தற்போது சுமாராக 150 க்கு மேற்பட்ட மாணவர்கள் வலிகாமம் பகுதியிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றவில்லை. இவ்வாண்டு பெறுபேறுகள் வீழ்ச்சி காணும் அளவிற்கு இந்நோயின் தாக்கம் உள்ளது என அவர் தெரிவித்தார்.

சிக்கின்குனியா நோயின் தாக்கம் இணுவில், உடுவில், மருதனார்மடம், மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் அதிகமான பொதுமக்களைப் பீடித்துள்ளது. இதில் மாணவர்களும் அடங்குகின்றனர்.

இப் பகுதிகளிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் பெரும்பாலான மாணவர்கள் தங்களைப் பரீட்சைக்குத் தயார் செய்ய முடியாத நிலையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பரீட்சை மண்டபங்களில் விடை எழுத முடியாத நிலையில் உள்ளனர். சில மாணவர்கள் வாந்தி எடுத்தும் சில மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் மயக்கமடைந்தும் உள்ளனர்.

கடந்த நான்கு நாட்களிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. பரீட்சை நிறைவடையும் நாட்களில் முழுமையானமாணவர்களும் பரீட்சை எழுதுவார்களா? என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-133)

# தபால் பொதிகள் இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கான 50 தபால் பைகள் நேற்று முன்தினம் எடுத்து வரப்பட்டு தெல்லிப்பழையில் வைத்து யாழ்.பிரதம தபால் நிலைய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எடுத்து வரப்பட்ட தபால் பைகள் யாவும் நேற்றைய தினம் தரம் பிரிக்கப்பட்ட நிலையில் இன்று விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது திருமலையில் 4ஆயிரம் தபால் பொதிகளும் கொழும்பில் 4ஆயிரம் தபால் பொதிகளும் வவுனியாவில் 300 தபால் பொதிகளும் தேங்கிக் கிடப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

திருமலையில் தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளில் தெரிவு செய்யப்பட்ட தபால் பைகள் மட்டுமே கடந்த நாட்களில் இடம்பெற்ற இரு கப்பல் சேவையின்போது எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-133)

## தனியார் சிற்றூர்தி சேவைகள் நகரப் பகுதியிலிருந்து

தனியார் சிற்றூர்திகள் யாழ். நகரப் பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபட நேற்று முதல் அனுமதி கிடைத்துள்ளதாக யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. முற்றவெளி பஸ் தரிப்பு நிலை யத்திலிருந்து கடந்த சில நாட்களாகச் சேவையில் ஈடுபட்டு வந்த சிற்றூர்திகளின் சேவைகளே நேற்று முதல் யாழ்.பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளது. (ச)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மின்சாரம் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மின்சாரம் பெற்றுக்கொள்ளும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஊடக தகவல்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சென்னையிலிருந்து அநுராதபுரத்துக்கு நேரடியாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் திட்டம் யூ.எஸ்.எயிட் நிறுவனத்துடன் நடத்தப்பட்டு பேச்சுவார்த்தைகளின் போது கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆவண பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காக மின்சக்தி அமைச்சுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பான பிரேரணையொன்றை அமைச்சர் டபிள்யூ.ஜே.செனவிரத்ன முன்வைத்திருந்தார்.

இந்தியாவிடமிருந்து இலங்கை ஒரு யுனிட் மின்சாரத்தை என்ன விலைக்கு வாங்குவது? அத்திட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது? என்பன தொடர்பான தீர்மானங்கள் பின்னர் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# முதலையை கட்டிப்பிடித்தவாறு கள்ளன் என கத்திய குடும்பஸ்தர்

(துன்னாலை)

படுக்கை அறைக்குள் புகுந்த முதலையை கட்டிப்பிடித்தவாறு கள்ளன் எனக் கத்திய குடும்பஸ்தர் அம் முதலையால் தாக்கப்பட்டுள்ளார். தென்மராட்சி மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி துன்னாலை கோவிற் சந்தைப் பகுதியில் வசிக்கும் ஒருவரது வீட்டிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரு குழந்தைகள் தந்தை தாய் என ஆறு பேர் அவ்வீட்டில் இருந்த வேளை நள்ளிரவு திடீரென பனம்மட்டையால் கட்டப்பட்ட தட்டியையும் மண் சுவரினையும் இடித்துக் கொண்டு உறக்கத்திலிருந்த குடும்பஸ்தரின் இடத்திற்கு முதலை சென்றுள்ளது.

அவர் அம் முதலையை திருடன் என நினைத்து கட்டிப்பிடித்துக்கொண்டு கள்ளன் கள்ளன் என கூச்சலிட்டார். அதற்கிடையில் அவரை முதலை தனது வாலினால் தாக்கியது. அதனை உணர்ந்த குடும்பஸ்தர் பின்னர் முதலை முதலை எனக்கத்தினார். அயலவர்கள் ஓடிவரவே முதலை அருகிலுள்ள வீடு ஒன்றுக்குள் ஓடி மறைந்தது.

எனினும் தேடிக்கண்டு பிடித்து அம் முதலை அடித்துக்கொல்லப்பட்டது. இச் சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றது. (ச-101)

# கிழக்கே நடந்த மோதலில் ஆறு புலிகள் உயிரிழப்பு

## இராணுவம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மியான் குளத்தில் நேற்று முன்னிரவு விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் நடைபெற்றுள்ளது. வாகரையில் இருந்து விடுதலைப் புலிகளின் அணி ஒன்று இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாக வடமுனை நோக்கி பிரதான நெடுஞ்சாலையை கடந்து செல்ல முயன்ற போது இந்த மோதல் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த மோதலின் போது ஆறு விடுதலைப்புலிகள் தமது பதில் தாக்குதலின் போது கொல்லப்பட்டுள்ளதாகவும் கடந்த அக்டோபர் 6 ஆம் திகதி பனிச்சங்கேணியில் விடுதலைப்புலிகளினால் சிறைப்பிடித்திருந்த இராணுவ சார்ஜன்ட் கே.எம்.எஸ். ரத்னாயக்கா மீட்கப்பட்டதாகவும் இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாழைச்சேனை மருத்துவமனையில் நேற்று மாலை இராணுவத்தினரால் விடுதலைப்புலிகளின் ஆறு சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த அரச படைச்சிப்பாய் ஒருருக்கும் மேலதிக சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவ அணியினர் பாதுகாப்புடன் தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள கரடியனாறு பகுதிக்கு அவரைக் கொண்டு செல்லும் வேளையில் படையினரும், இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் குழுவினரும் தங்களது அணி மீது தாக்குதல் நடத்தியதாக செய்திகள் தெரிவிப் பதாக விடுதலைப்புலிகளின் இராணுவத் தரப்புப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

சேதவிபரங்கள் குறித்த தகவல்களை சேகரித்துக்கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இப் பகுதியில் நடைபெற்ற மற்றுமொரு தாக்குதலில் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் 15 பேரை தாங்கள் கொன்றுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் முகாமிலிருந்த 12 இளம் சிறார்களை தாங்கள் மீட்டு மட்டக்களப்பில் உள்ள யுனிசெப் அமைப்பிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கருணா தலைமையில் இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் சார்பில் பேச வல்லவராகக் கூறும் ஆசாத் மௌலானா பி.பி.ஸிக்குத் தெரிவித்தார். (ச)

# அரசாங்கத்தின் குற்றச்சாட்டிற்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

ஐக்கிய நாடுகள் சபையின் தொண்டு நிறுவனங்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொண்டு வரும் உதவி நடவடிக்கைகள் குறித்து குற்றஞ்சாட்டி இருக்கும் அரசின் அண்மைய அறிக்கை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் தமது அதிர்ச்சியையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா.தொண்டு நிறுவனங்கள் வாகரையில் இடம் பெயர்ந்த மக்களுக்கு தற்காலிக கூடாரங்கள் அமைப்பதற்கு வழங்கிய பொருள்களை விடுதலைப்புலிகள் தமது பதுங்கு குழிகளை அமைப்பதற்கு பயன்படுத்தினர் என்றும் அவற்றை இராணுவத்தினர் மீட்டுள்ளனர் என்றும் கடந்த 13 ஆம் திகதி அரசு செய்தி வெளியிட்டிருந்தது.

வாகரையில் இடம் பெயர்ந்த மக்களுக்கான அத்தியாவசியப் பொருட்களுக்கு தொடர்ந்தும் தடை விதித்துள்ள அரசு ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் ஊடாகக்கிடைக்கும் சொற்ப உதவிகளையும் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனேயே அந்த அபாண்டமான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர் என்று விடுதலைப்புலிகள் தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா.தொண்டு நிறுவனம் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கிய கூடாரப்பொருட்களை பதுங்கு குழிகளின் மேல் போட்டு படம் பிடித்து ஊடகங்களின் வெளியிடும் அரசின் இந்த திட்டமிட்ட பரப்புரையானது சிறுபிள்ளைத்தனமானது என்று தெரிவித்துள்ள விடுதலைப்புலிகள் அரச ஊடகத்தின் இந்த குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ளனர். (ச)

## ரவிராஜ்...

கொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரி வித்தார். அவர் தொடர்ந்தும் கூறியதாவது; படுகொலை செய்யப்பட்ட உப பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன தனது சேவைக் காலத்தில் பயன்படுத்திய வாகனத்தை அவரது குடும்பத்தினருக்கு சகாய விலையில் வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பிரேரணையையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு முன்வைத்திருந்தார் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## "தேசத்தின் குரல்"...

சங்கமமாக அந்த உறவு மலர்ந்தது.

தினம் தினம் நாம் பகிர்ந்து கொண்ட வாழ்வனுபவத்தில் வலிமை பெற்று வளர்ந்தது. சாதாரண மனித உறவுகளில் இருந்து இது முற்றிலும் வேறுபட்டது. காலத்தால் கனிந்து, வரலாற்றால் வடிவம் பெற்ற ஒரு அலாதியான இலட்சிய உறவு அது.

பாலா அண்ணையை நான் ஆழமாக நேசித்தேன். விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்த அவர். நானும் அவரை அப்படித்தான் நேசிக்கின்றேன்.

ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்தாசையாக ஒன்றிணைந்திருந்த நாட்களே அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டு கொண்டேன். மோசமாக சுகவீனமுற்று, தினம் தினம் சாவோடு போராடியது போதும், தாங்க முடியாத உடல் உபாதைகளால் வருந்தியபோதும், தளர்ந்து போகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது.

அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தைத் தொட்டு நின்றது. அவர் துன்பத்தால் துவண்ட போதெல்லாம் எனது ஆன்மாவும் கலங்கி அழுதது. எமது இயக்கத்தின் வளர்ச்சியிலும் அதன் இன்றைய விரிவாக்கத்திலும் பாலா அண்ணனுக்கு ஒரு நிரந்தரமான இடம் இருக்கிறது.

ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, ஒரு தத்துவாசிரியராக எல்லாவற்றுக்கும் மேலாக எனது உற்ற நண்பனாக இருந்து எனக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தவர். ஆலோசனையும் ஆறுதலும் தந்தவர்.

எனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டு, எனது பளுக்களையும் பங்கிட்டுக்கொண்டவர். எமது விடுதலை இயக்கம் தோற்றம் பெற்ற ஆரம்ப காலம் முதல் என்னோடு இருந்து எல்லாச் சோதனைகளையும் வேதனைகளையும் சவால்களையும் சங்கடங்களையும் தாங்கிக் கொண்டவர்.

எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு மூலாதாரமாக முன்னால் நின்று செயற்பட்டவர். ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து எமது தேச சுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்நிறுத்திய பாலா அண்ணையின் மாபெரும் போராட்டப் பணிக்கு மதிப்பளித்து 'தேசத்தின் குரல்' என்ற மாபெரும் கௌரவப்பட்டத்தை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன்.

பாலா அண்ணை உண்மையில் எம்மை விட்டுப் போகவில்லை. அவர் எமது நினைவாலயங்களில் என்றும் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்பார். (ச)

# சாவகச்சேரியில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தம்பு தோட்டம் இராணுவ முகாமிற்கு அண்மையில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இனந்தெரியாதோரால் மீன் வியாபாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் கச்சாய் வீதி கோயில் குடியிருப்பைச் சேர்ந்த நாகலிங்கம் ஜெயேந்திரன் (வயது 43) என்ற மீன் வியாபாரி ஆவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச)

# வெளிவாரிப் பரீட்சைகள் இராமநாதன் மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் என யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ச)

## அன்ரன் பாலசிங்கம்...

கடந்த 35 வருடங்களாக நீரிழிவு நோயின் காரணமாக அவரது இரு சிறுநீரகங்களும் ஒன்றின் பின் ஒன்றாக செயலிழந்து போக போராளி ஒருவரிடம் தானமாகப் பெற்ற ஒரு சிறுநீரகத்துடன் வாழ்ந்து வந்தார்.

நீரிழிவு,சிறுநீரகச் சிக்கல் ,உயர் இரத்த அழுத்தம், இதய நோய் ஆகியவற்றுடன் தமது அரசியல் பணிகளை மேற்கொண்டு வந்த அவர் கடந்த 10 மாதங்களாக கடும் நோயினால் அவதிப்பட்டார்.

இதனையடுத்து தனது அரசியல் பணிகளை துறந்து ஓய்விலிருந்தார். தனது உடலைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவருக்கு புற்றுநோய் மோசமாகப் பரவியுள்ளதாக கடந்த மாத நடுப்பகுதியில் தெரிவித்தனர்.

அந் நோய் உடல் முழுவதும் பரவியிருந்ததையும் அவர்கள் உறுதிப்படுத்தினர். இந் நிலையில் அவர் உயிர் நேற்று மண்ணை விட்டுப் பிரிந்தது.

அவரது மரணம் தொடர்பாக லண்டனில் இருந்து வெளிவந்த அறிக்கை வருமாறு, தமிழ் மக்களையும்,தமிழ் மண்ணையும் ஆழமாக நேசித்து,கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இதயத்தில் விடுதலைக் கனலை சுமந்து இறுதி வரை ஓயாது உழைத்த,விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான மதிப்புக்குரிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று காலமாகியுள்ளார்.

தமிழினத்தின் அடி நாதமாக, தமிழீழத் தேசியத் தலைவரின் குரலாக , தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூச்சாக நின்ற, மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் உயிர் எம்மை விட்டு நேற்று பிற்பகல் 1.45 மணிக்கு மண் உலகில் இருந்து பிரிந்தது.

தனது சொல் வன்மையாலும் ,இராஜதந்திர மதியூகத்தினாலும், அணையாத விடுதலை வேட்கையாலும் ,தமிழீழ மக்களையும்,உலகத் தமிழரையும் ஆட்கொண்ட மதியுரைஞர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார்.

எல்லோரது இதயத்திலும் இடியாக விழுந்துள்ள மதியுரைஞரின் பிரிவால் தமிழினம் துடித்து நிற்கின்றது. சத்தியத்தை சாட்சியமாக வரிந்து, தணியாத விடுதலை வேட்கையுடன் வாழ்ந்து ,வீறுகொண்ட விடுதலைப் போராட்டத்தை அடிநாதமாகக் கொண்டு, தமிழ் மக்களை ஆழமாக நேசித்து, தமிழீழத்தின் இராஜகுருவாக திகழ்ந்த மதி உரைஞரை பிரிந்து தமிழினம் ஆற்றுப்படுத்த முடியாத துயரில் மூழ்கியுள்ளது.

உயரிய சத்தியத்திற்காக வாழ்ந்து , விடுதலைக்கு விதையாகி வீழ்ந்த மதியுரைஞர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் என்றென்றும் ஈழத்தமிழர்களின் வரலாற்றில் நிலைத்து நிற்பார். (ச)

**உடன் தேவை**

**பாதுகாப்பு உத்தியோகஸ்தர்**

(ஆண்கள் இரவு/பகல்)

யாழ்.நகரப் பகுதியிலிருந்து 5 கிலோ மீற்றர் பிரதேசத்தில் வசிக்கும், தகுதியுடையவர்கள் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்,
வலம்புரி.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.